# மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவன புதிய கட்டடம்: அடுத்த மாதம் அடிக்கல் நாட்டு விழா

By dn | Published on : 26th February 2014 12:43 AM | அ+ அ அ- | |

மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனத்துக்கான புதிய கட்டடத்தின் அடிக்கல் நாட்டு விழா வரும் மார்ச் மாதம் நடைபெறும் என்று மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவன இயக்குநர் வி.கோ.பூமா தெரிவித்தார்.

சென்னையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியது:

சோழிங்கநல்லூரில் 17 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்தை தமிழக அரசு செம்மாழி தமிழாய்வு நிறுவனத்துக்காக அளித்துள்ளது. அந்த நிலத்தில் மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனத்துக்காக புதிய கட்டடம் கட்டப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் நாட்டு விழா மார்ச் மாதம் நடைபெறும்.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் திருக்குறள் இருக்கை அமைப்பதற்காக ரூ.1 கோடி அளிக்கப்படும். திருக்குறள் ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்களுக்கு இதன்மூலம் நிதியுதவி அளிக்கப்படும். இதேபோல தஞ்சை பல்கலைக்கழகத்தில் தொல்காப்பிய இருக்கைக்கு ரூ.1 கோடியும் அளிக்கப்படும்.

2013- 2014 ஆம் ஆண்டு காலத்தில் செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் ரூ.8 கோடி செலவு செய்துள்ளது. சுமார் 80 பயிலரங்கங்கள், 60 கருத்தரங்களை முக்கிய கல்லூரிகளில் அனைத்திலும் நடத்தப்பட்டுள்ளது.

ஐம்பெரும் விழா: மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம் ஐம்பெரும் விழாவில் பிப்ரவரி 27-ஆம் தேதி லயோலா பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடத்துகிறது. அந்த ஐம்பெரும் விழாவில் தரவகம், செம்பதிப்பு நூல், மின் நூல்கள், செல்போனுக்கான திருக்குறள் மென்பொருள், சங்க இலக்கிய காட்சிப் படம் ஆகியவை வெளியிடப்படவுள்ளன.

தமிழில் முதல் முறையாக உ.வே.சா. செம்மொழித் தரவகம் எனும் புதியதொரு சொல் தேடு முறையை இந்நிறுவனம் வடிவமைத்துள்ளது. இந்நிறுவனம் வெளியிட்டுள்ள 41 நூல்களில் இருந்து தொல்காப்பியம், அகநானூறு, குறுந்தொகை, கலித்தொகை உள்ளிட்ட 21 நூல்கள் இதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் தமிழின் தனிச் சொற்கள் மற்றும் இணைந்த சொற்களில் நமக்குத் தேவையான சொல்லை இத்தரவகத்தின் மூலம் எளிதில் கண்டறிய முடியும்.

விழாவில், செம்பதிப்பு நூலை பேராசிரியர் செ.வே.சண்முகம், மின் நூல்களை எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி, செல்போனுக்கான திருக்குறள் மென்பொருளை எழுத்தாளர் அசோகமித்திரன், சங்க இலக்கியக் காட்சிப் படத்தை திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்துராமன் ஆகியோர் வெளியிடுகின்றனர் என்றார் வி.கே.பூமா.